பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை 17.11.2020 கதிர் 243

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனவரி மாதம் முதல் 1000 ரூபா

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பிரதமரும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இந்தத் தொகையைத் தொழிலாளர்களுக்கு வழங்க முடியாமல்போகும் 2

# மஞ்சள், இஞ்சி இறக்குமதியை முற்றிலும் தடை செய்தது அரசு

### 'பட்ஜட்' உரையில் பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, நவ. 17

2021ஆம் ஆண்டுக்கான சம கால அரசின் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் இன்று பிற்பகல் மஹிந்த ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்ட உரையில் பிரதமர், மஞ்சள் மற்றும் இஞ்சி இறக்குமதியை செய்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். 2

## ஹாட்லி மைந்தர்களின் 21ஆவது நினைவேந்தல்

### இன்பர்சிட்டி கடற்கரையில் இன்று





ஹாட்லிமைந்தர்களது 21ஆம் ஆண்டு நினைவேந்தல் நாள் வடமராட்சி, இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் உணர்வுபூர்வமாக இன்று கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. 2

## இலங்கையில் விபத்துக்களால் வருடாந்தம் 3 ஆயிரம் பேர் சாவு

15 ஆயிரம் பேர் அங்கவீனம்; 20 ஆயிரம் பேர் காயம்


இலங்கையில் தினமும் வீதி விபத்துக்களால் 5 தொடக்கம் 10 பேர் வரை உயிரிழக்கின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஊடகங்களிடம் இன்று கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்படி வருடாந்தம் வீதி விபத்துக்களால் 3 ஆயிரம் பேர் மரணிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், வீதி விபத்துக்களால் 15 ஆயிரம் பேர் அங்கவீனர்களாகின்றனர் என்றும், 20 ஆயிரம் பேர் காயமடைகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வவுனியா சின்னத்தம்பனையில் காட்டு யானைகள் தொல்லை!



வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுற்குட்பட்ட சின்னத்தம்பனை கிராமத்தில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். 2

## இனியபாரதிக்குப் பிணை



கிழக்குமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இனிய பாரதி என்றழைக்கப்படும் குமாரசாமி புஷ்பகுமார் இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் மன்னாரில் உத்தரவை மீறிச் சென்ற சொகுசு 2

## பச்சை மீன் தின்று காட்டிய திலிப் வெதஆரச்சி எம். பி.!




கொழும்பு, நவ.17

கொரோனா தொற்று அச்சத்தால் மீனை வாங்குவதற்கு மக்கள் அச்சம் கொண்டுள்ள நிலையில் முன்னாள் மீன்வளத்துறை அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான திலிப் வெதஆரச்சி, மக்கள் மீன் சாப்பிட வேண்டும் என்று வலியுறுத்தினார். 2

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்: மூன்று சந்தேகநபர்களுக்கும் பிணை!

### கடுமையான நிபந்தனைகளுடன்



முல்லைத்தீவில் இரண்டு ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று சந்தேகநபர்களையும் கடும் நிபந்தனைகளுடன் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் இன்று விடுவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத காடழிப்பு தொடர்பில் செய்தி சேகரிக்க 2

## அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவில் துமிந்த சில்வா எம்.பிக்காக முறைப்பாடு

கொழும்பு, நவ.17

முன்னாள் தொழிற்சங்கவாதி பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்த சில்வாவுக்காக அரசியல் பழிவாங்கல் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவுக்கு இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2

## ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட வழக்கின் எதிரொலி; முல்லைத்தீவில் 180 ஏக்கர் காடழிப்பு அம்பலமாகியது!

முல்லைத்தீவில் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர்கள் அடையாளப்படுத்திய பகுதி உள்ளடங்கலான நாகஞ்சோலை வனப்பகுதியில் 180 ஏக்கர் அரச காடுகள் அழிக்கப்பட்டுள்ளமை முல்லைத்தீவு பொலிஸாரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத காடழிப்பு தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் சண்முகம் தவசீலன், கணபதிப்பிள்ளை குமணன் ஆகியோர் தாக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணை இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்கப்பட்ட சம்பவம் சம்பந்தமாக மேலதிகமான தகவல்களை அவர்கள் சம்பவத்தினத்தன்று சென்று செய்தி சேகரித்த வனப்பகுதி உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டு முழுமையாக அறிக்கையாகச் 2

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்: ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களான சண்முகம் தவசீலன், கணபதிப்பிள்ளை குமணன் ஆகிய இரண்டு ஊடகவியலாளர்கள் மீது மரக் கடத்தல் காரர்களால் கடந்த மாதம் 12ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் காயமடைந்த ஊடகவியலாளர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தனர். தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 5 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்தநிலையில், முதலாம், இரண்டாம் சந்தேகநபர்கள் ஏற்கனவே பிணையில் விடுக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் எஸ் லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது விளக்கமறியலில் வைக்கப்பட்ட மூன்று சந்தேகநபர்களையும் கடும் நிபந்தனைகளுடன் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன், க.பார்த்தீபன், சி.துஸ்யந்தி உள்ளிட்ட சட்டவாளர்கள் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கு விசாரணையின்போது பொலிஸார் மற்றும் வனவளத்திணைக்களம் சார்பில் மேலதிக அறிக்கைகள் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் இந்த வழக்கில் நான்காம், ஐந்தாம் சந்தேக நபர்களுக்கு அடையாள அணிவகுப்பு தேவைப்பட்ட நிலையில் சம்பவம் நடந்த அன்று அவர்கள் அங்கு இருந்ததை உறுதிப்படுத்தி ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அதன் அடிப்படையிலும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமைகள் காரணமாகவும் சந்தேகநபர்களுக்குக் கடுமையான நிபந்தனைகளுடன் நீதிவான் பிணை வழங்கியுள்ளார்.

மூன்றாம், நான்காம், ஐந்தாம் சந்தேகநபர்களைத் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கவும், மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமைகளில் நீதிமன்றத்தில் ஒப்பமிடுமாறும் நீதிவான் பணித்துள்ளார்.

வழக்குத் தொடுநர் மற்றும் சாட்சியாளர்களுக்கான எந்த அச்சுறுத்தல் செயற்பாடுகளிலும் ஈடுபடக்கூடாது எனவும் நீதிவான் எச்சரிக்கை செய்தும் மூன்று சந்தேகநபர்களையும் பிணையில் விடுவித்துள்ளார்.

தொடர்ச்சியாக இந்த வழக்கு விசாரணையை மேற்கொள்ளவதற்குப் பொலிஸாரும் வனவளத் திணைக்களத்தினரும் சரியான விதத்தில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று மன்று கட்டளை பிறப்பித்துள்ளதுடன் இந்த வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## அரசியல் பழிவாங்கல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி படுகொலை வழக்கில் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டமை அரசியல் பழிவாங்கல் என்றும் முறைப்பாட்டில் கூறப்பட்டிருக்கின்றது.

விரைவில் இந்த முறைப்பாடு விசாரணைக்கு எடுக்கப்படும் என்று ஆணைக்குழு வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அவ்வாறு விசாரணை நடத்தும் பட்சத்தில் மரண தண்டனைக் கைதி முன்னாள் எம்.பி. துமிந்த சில்வா விசாரணைக்கு ஆஜராகலாம் எனவும் கூறப்படுகின்றது.

## ஊடகவியலாளர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்குமாறு கடந்த வழக்குத் தவணையின் போது பொலிஸாரிடம் மன்று கேட்டிருந்தது. இதுகு இணங்க பொலிஸார் அன்றயதினமே (03.11.2020) ஊடகவியலாளர்கள் இருவரையும் அழைத்து சென்று குறித்த பகுதிகளை பார்வையிட்டனர் .

இதனை தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட விசாரணையின் போது ஊடகவியலாளர்கள் ஆய்வு செய்த இடங்களில் 180 ஏக்கர் அரச காடுகள் அழிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யார் அழித்தது என்பது தொடர்பில் இதுவரையில் உறுதிப்படுத்த முடியாது இருப்பதாக பொலிஸாரும் வனவளத் திணைக்களத்தினரும் தெரிவித்துள் ளார்கள்.

குறித்த பகுதியில் காடழிப்பு தொடர்பில் சில வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அழிக்கப்பட்ட மரங்கள் ஒரு தொகுதியும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆனால் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என மன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த பகுதியில் பாரிய காடழிப்புசம்பவம் ஒன்று இடம்பெற்றிருப்பது பொதுவெளிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுதொடர்பானஉரியகுற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும், சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சூழலியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

## பச்சை மீன் தின்று .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டிருந்த அவர், மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டதுடன் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் உடன் மீனை உட்கொண்டு காண்பித்தார்.

அத்தோடு இது தொடர்பாக பொது மக்களுக்கு ஆலோசனை வழங்குவது அரசாங்கத்தின் மற்றும் சுகாதார அமைச்சின் கடமை என்று அவர் மேலும் கூறினார்.

மேலும் தற்போது காணப்படும் சூழ்நிலையில் மீனவர் சமூகத்திற்கு பொது மக்கள் செய்யக்கூடிய மிகப் பெரிய கடல் உற்பத்திகளை வாங்குவதாகும் என்றும் திலிப் வெதஆரச்சி குறிப்பிட்டார்.

## இனியபாரதிக் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் மீது கடற்படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டமையுடன் குறித்த வாகனத்தில் கேரளக் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் இனியபாரதி ஆகியோரைக் கைது செய்திருந்தனர் .

## வவுனியா .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை சின்னத்தம்பனை கிராமத்தில் மக்கள் குடியிருப்புகளுக்குள் பிரவேசித்த யானைகள் பயன்தரும் தென்னம்பிள்ளைகளை முறித்து சேதப்படுத்தியுள்ளன. அதேவேளை வீடுகளையும் சேதப்படுத்தியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பாரம்பரிய கிராமங்களில் ஒன்றான சின்னத்தம்பனை விவசாயக் கிராமத்தில் கடந்த பல வருடங்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ள நிலையில் தற்போது பகல் நேரங்களிலும் யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் வந்து பயன்தரும் மரங்களையும் விவசாய நிலங்களையும் சேதப்படுத்தி வருகின்றது.

இந் நிலையில் கிராமத்தை யானைகள் ஆக்கிரமித்து வருவதால் தாம் தமது சொந்த கிராமத்தில் இருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை உருவாகி வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் நிரந்தரமாக விவசாயம் செய்து நிம்மதியாக வாழ்வதற்கு தமது கிராமத்தை சுற்றி யானைகளுக்கான மின்சாரவேலியை அமைத்து தருமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஹாட்லி மைந்தர்........





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விச் செயற்பாட்டின் நிமித்தம் இன்பர்சிட்டி கடற்பகுதியில் 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 2000ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு விஞ்ஞானபீட மாணவர்கள் நான்கு பேரின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீட மாணவனாகக் கல்வி கற்று வந்தவேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனது 16ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை 9.00 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி கடலோடு கடலாகச் சங்கமித்திருந்த பூரணமூர்த்தி கந்தர்வன், சிவநாதன் இரவிசங்கர், சுந்தரலிங்கம் சிவோத்தமன் மற்றும் பாலகிருஸ்ணன் பிரதீபன் ஆகியோருடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீட மாணவனாக இருந்தபோது 2004ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியன்று இடம்பெற்ற ரயில் விபத்தில் சிக்கிச் சாவடைந்திருந்த மரியரட்ணம் குணரட்ணம் ஆகியோரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஒன்றிணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வை நடத்தியுள்ளார்கள்.

குறித்த மாணவர்களது திருவுருவப்படம் வைக்கப்பட்டு அவர்களுக்கு விருப்பமான உணவு வகைகள் படையலிட்டு மேற்கொள்ளப்பட்ட நினைவேந்தல்நிகழ்வில் அவர்களது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மலர் தூவி, சுடரேற்றி நினைவு வணக்கம் செலுத்தினார்கள்.

இறுதியில் படையல் பொருள்கள் மற்றும் மாலை, பூக்கள் என்பன மாணவர்களின் ஆன்மா இரண்டறக் கலந்திருக்கும் இன்பர்சிட்டிக் கடலில் கலக்கப்பட்டது.

இதேவேளை, இம்மாணவர்களது நினைவாக குருதிக்கொடை முகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணி முதல் ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கையாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக குருதிக் கொடைமுகாமைநடத்தபணிக்கப்பட்டுள்ளதால்குருதிக்கொடைவழங்கவிரும்பும் தன்னார்வலர்கள் தங்கள் விபரங்களை முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## மஞ்சள், இஞ்சி ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, களுத்துறை, கண்டி, அநுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் புதிய தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கிராமப்புறங்களில் உள்ள வழிபாட்டு தலங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் விவசாயிகளுக்கு விதை மற்றும் உரங்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்எனவும்அவர் தெரிவித்துள்ளார்.

நெல் உற்பத்திக்கான உரத்தை இலவசமாக வழங்கவும், மற்ற பயிர்களுக்கு ரூ.1500 ரூபாய் வீதம் வழங்கவும் உள்ளதாகவும் அவர் மேலும் மேலும் கூறியுள்ளார்.

## தோட்டத் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்கள் குறித்து மாற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று பிற்பகல் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.






# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தலைநகரின் ஆபத்து நிலை

கொரோனா நெருக்கடிகள், பொருளாதாரப் பின்னடைவுகளுக்கு மத்தியில் நாட்டின் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சரும் என்ற முறையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்து விட்டார்.

ஒருபுறம் கொரோனாத் தொற்றும், நெருக்கடியும், பாதிப்பும், அதற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளும், மருத்துவப் போராட்டங்களும் தொடர, மறுபுறம் இயல்பு வாழ்க்கையும் தொடரத்தான் வேண்டும், வேறு வழியேயில்லை என்ற நிலைக்கு அரசும் வந்து விட்டதாகவே தோன்றுகின்றது.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு காட்டும் மெத்தனப் போக்கு – கொஞ்சம் மென்மையான தற்போதைய அணுகுமுறை – இது விடயத்தில் அதிகாரத் தரப்பின் மன நிலையை அவ்வாறுதான் பிரதிபலிக்கின்றது.

இந்தத் தொற்று ஆரம்பத்தில் நாட்டுக்குள் ஊடுருவிய போது அரசு காட்டிய தீவிரப் போக்கும் காட்டமான நடவடிக்கைகளும் இப்போது காணாமல் போய் விட்டன.

ஆரம்பத்தில் முழு நாட்டையும் முடக்கி, வாரக் கணக்கில் ஊரடங்கைப் பிறப்பித்து, கொரோனா வைரஸ் தொற்றுப் பரம்பலை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய அரசு, இப்போதைய நிலையில் தடுமாறுகின்றது. ஆங்காங்கே வெறுமனே பிரதேச முடக்கங்களோடு அடங்கி நிற்கின்றது.

முன்னர் வெலிசறைக் கடற்படை முகாம் கொத்தணி, கந்தக்காடு முகாம் கொத்தணி என வைரஸ் பரவலுக்கான மையங்கள் நிலை கொண்ட போது அவற்றைக் கட்டுப்படுத்தி அடக்கி, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசின் தீவிரப் போக்கு நன்கு உதவியது.

இப்போது நிலைமை அப்படியல்ல.

மினுவாங்கொடை ‘பிரண்டிக்ஸ்’ ஆடைத் தொழிற்சாலை கொத்தணி, பேலியகொடை மீன் சந்தைக் கொத்தணி, சிறைச்சாலை கொத்தணி, பொலிஸ் நிலையங்களின் கொத்தணி என்று புதிது புதிதாக வைரஸ் தொற்றுப் பரவல் கொத்தணிகள் புற்றீசல் போல கிளம்பிக் கொண்டிருக்கின்றன.

கொழும்பிலும் புதிதாகப் புறக்கோட்டை கொத்தணி, மட்டக்குளிய கொத்தணி என்று தோன்றும் ஆபத்து நேர்ந்திருக்கின்றது.

கம்பஹா மாவட்டத்தைத் திடீரென மிஞ்சும் நிலையில் கொழும்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் ஊழித் தாண்டவமாடுகின்றது.

கொழும்பு மாநகர சபைப் பிரதேசம் அடர்த்தியாக மக்கள் செறிந்து வாழும் நாட்டின் மிக முக்கிய மையம். அங்கு நிலை கொண்டு தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளது கொரோனா வைரஸ் எனும் கொடூர அரக்கன்.

கொழும்பில், குறிப்பாக மக்கள் மிகவும் நெருக்கமாக வாழும் சேரிப்புறங்களில், இத்தொற்று மிகத் தீவிரமாக – மிக மோசமாக – பரவும் பேராபத்து ஏற்பட்டிருப்பதாக எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

கொழும்பு மாநகரத்தை மூன்று வாரங்கள் அல்லது குறைந்த பட்சம் இரண்டு வாரங்கள் முழுமையாக முடக்கி, இந்தப் பரவலைக் கட்டுப்படுத்தாவிட்டால் தலைநகர் பேராபத்தில் மூழ்கும் என்று எச்சரித்திருக்கின்றார் கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனநாயக்கா.

சரியோ, பிழையோ கொழும்பு மாநகர நிர்வாகம் நாட்டில் ஆளும் கட்சி வசம் இல்லை. எதிரணிப் பக்கம் உள்ளது.

இதனாலோ, என்னவோ, நாட்டின் மிக, மிக முக்கிய மிக, மிக அவசரமான – பல்லாயிரம் உயிர்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுடன் தொடர்புடைய – இந்த விடயத்தில் கொழும்பு மாநகர நிர்வாகமும் நாட்டின் ஆளும் தரப்பும், இவ் விடயத்தின் அணுகுமுறை தொடர்பில் ஒன்றுபட முடியாமல் முரண்பட்டு நிற்கின்றன.

அரசு, வெறுமனே தலைநகர் கொழும்பை மட்டும் சிந்திக்காமல், நாட்டின் பொருளாதாரம், நிதி நிலைமை பற்றி எல்லாம் சிந்தித்துத் தீர்மானம் எடுக்க முயல்கின்றது.

கொழும்பு மேயரோ தனது தலைநகரின் பாதுகாப்பு பற்றி மட்டும் சிந்தித்துச் சிரத்தை கொண்டு கவலை தெரிவிக்கின்றார்.

எது, எப்படியென்றாலும், கொரோனாவைச் சகித்துக் கொண்டு, அதன் பிரச்சினைகளையும் எதிர்கொண்டவாறு, நாட்டின் வழமையான செயற்பாட்டை முன்னெடுப்பது என்ற தீர்மானத்தில் இருக்கும் ஆளும் தரப்பு, முன்னர் ஆரம்பத்தில் எடுத்தமை போன்று இறுக்கமான, தீவிரமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை இனி எடுக்கமாட்டாது என்பது திண்ணம்.

ஆளும் தரப்பின் எதிர்பார்ப்புப்படி – தீர்மானத்தின்படி – கொரோனாவுடன் வாழப் பழகிக் கொள்வதைத் தவிர மக்களுக்கு வேறு மார்க்கமில்லைப் போலும். மக்களின் துரதிஷ்டம் அதுதான்.

# வடக்கில் பி.சி.ஆர். பரிசோதனையில் வவுனியா பெண்ணுக்குக் கொரோனா!

**மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்**

அரியாலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள 62 பேருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

லண்டனுக்கு பயணம் செய்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்றிருந்த ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமானவர்கள் மற்றும் தொடர்புடையவர்கள் என 62 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின் பிரகாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரால் இந்த சுயதனிமைப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

குறித்த பெண், நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட போதே கொரோனா தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் ஞாயிறன்று வாதரவத்தையில் மரநடுகை





தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் வடமாகாண மரநடுகை மாதச் செயற்பாடுகளில் ஒன்றாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வாதரவத்தை வீரவாணியின் உள்ளக வீதிகளில் 100 இலுப்பை மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. வீரவாணி சமூக அபிவிருத்திக் குழுவைச் சேர்ந்த திரு. யோகநாதன் யகேன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் திரு. க. கேதீஸ்வரநாதன், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ் ஆகியோருடன் கிராமத்து இளைஞர்களும் பங்கேற்றிருந்தனர். நடுகை செய்யப்பட்ட 100 மரக்கன்றுகளையும் பராமரிக்கும் பொறுப்பை வீரவாணி சமூக அபிவிருத்திக் குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழகத்தில் சமய குரவர்களினால் பதிகங்கள் பாடப்பெற்ற திருத்தலங்கள் பலவற்றில் தல விருட்சங்களாகக் காணப்படுகின்ற இலுப்பை மரம் எமது பிரதேசத்துக்கும் உரிய ஓர் உள்நாட்டுத் தாவர இனமாகும். எம்மிடையே முன்னர் சூழலியல் ரீதியாகவும் மருத்துவ ரீதியாகவும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருந்த இம்மரம் தற்போது அதிகம் கவனிக்கப்படாத ஒரு மரமாக எண்ணிக்கையில் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் 124 பேருக்கு கொரோனா தொற்று 9 ஆயிரத்து 674 பேர் தனிமைப்படுத்தலில்!

**கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

ஏறாவூரில் ஒருவரும் கோறளைப்பற்று மத்தியில் ஆறு பேரும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய கிழக்கில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 124 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேநேரம் கிழக்கு மாகாணத்தில் 9 ஆயிரத்து 674 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் இவர்களில் 5 ஆயிரத்து 91 பேர் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் பலர் நாடு வந்தடைந்தனர்

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் பலர் நாடு திரும்பியுள்ளனர்.

இரு மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கித் தவித்த 88 இலங்கையர்கள் இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடன் இன்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு தொழில் வாய்ப்புக்காகச் சென்ற 29 இலங்கையர்கள் அபுதாபியிலிருந்து இன்று அதிகாலை 12.40 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் கட்டாரிலிருந்து 37 இலங்கையர்கள் இன்று அதிகாலை 1.45 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேபோன்று கட்டாரிலிருந்து மேலும் 22 இலங்கையர்களும் அதிகாலை 5.20 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாட்டை வந்தடைந்த அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுடன், அதனைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

## சுகாதார விதிகளைப் பின்பற்றாத 290 நபர்கள் கைதாகியுள்ளார்கள்

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேர காலத்தில் 27 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 20 ஆம் திகதியிலிருந்து இது தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் மொத்தம் 290 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# இலங்கையிலிருந்து படகுகளை மீட்காவிட்டால் மக்களைத் திரட்டிப் போராட்டம் நடத்துவோம்!

## எச்சரிக்கிறார் அழகிரி

இலங்கையிடமிருந்து படகுகளை மீட்காவிட்டால் மீனவர்களைத் திரட்டிப் போராட்டம் நடத்துவோம் எனத் தமிழகக் காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று (திங்கட்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் கே.எஸ்.அழகிரி மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபா மதிப்பிலான 121 மீன்பிடிப் படகுகளை பொது ஏலத்தில் விற்பனை செய்யலாம் அல்லது உடைத்து அப்புறப்படுத்தலாம் என்று யாழ்ப்பாணம் நீதிமன்றம் கடந்த நவம்பர் 7 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

இந்தத் தீர்ப்பு தமிழக மீனவர்களிடையே கடும் அதிர்ச்சியையும், பதற்றமான சூழ்நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2015 முதல் 2018 வரை பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளைத் திரும்பப் பெறுவதற்கான எந்த முயற்சியிலும் இந்திய அரசு ஈடுபடவில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் எல்லை தாண்டிய குற்றத்தின் கீழ் தமிழகம்



மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவர்கள் 1,300 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்களிடமிருந்து ஏறத்தாழ 350 இற்கும் மேற்பட்ட படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இலங்கை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தமிழகம் மற்றும் புதுச்சேரி மீனவர்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபா மதிப்புள்ள மீன்பிடிப் படகுகள் விரைவில் அழிக்கப்படுவதற்கும், ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நடவடிக்கையின் மூலமாக ரூபா 25 லட்சம் முதல் 60 லட்சம் வரையிலான மதிப்புள்ள படகுகள் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டால் ரூபா 3 முதல் 4 லட்சம்தான் விலையாகக் கிடைக்கும்.

இதனால் மீனவர்கள் கடுமையான இழப்பைச் சந்திக்க வேண்டி வரும். இந்த ஏல விற்பனைக்கு மத்திய பா.ஜ.க.அரசும், தமிழக அ.தி.மு.க.அரசும் ஒப்புதல் வழங்கியுள்ளன எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இது ஏற்கெனவே மீன்பிடித் தொழிலால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கிற மீனவர்கள் மேலும் கடுமையாகப் பாதிக்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து படகுகளை மீட்டுக் கொண்டு வர முடியாது என மத்திய, மாநில அரசுகள் கருதுகின்றமை தங்களது இயலாமையையே காட்டுகிறது. இதற்கு ஈடுகட்டுகின்ற வகையில் மீன்பிடிப் படகுகளை இழக்கும் ஒவ்வொரு மீனவருக்கும் ஒரு புதிய படகை முழு மானியத்தில் வழங்குவதற்குத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் மீட்கப்படாமல், நீதிமன்ற ஆணையின் மூலம் தமிழக மீனவர்கள் தங்களது மீன்பிடிப் படகுகளை இழந்தமைக்குக் காரணம் மத்திய, மாநில அரசுகளின் அலட்சியப் போக்குதான்.

எனவே, கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வரும் தமிழக, புதுச்சேரி மீனவர்களுக்குப் பேரிழப்பு ஏற்படாத வகையில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து தீர்வு காண தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக அரசு, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி, பறிமுதல் செய்யப்பட்ட 121 படகுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

கடந்த காலத்தில் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டபோதும், தாக்குதலுக்கு உள்ளானபோதும் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இலங்கை எல்லையை மீறி விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் வழங்கியமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, இலங்கை அரசை ஏதோ ஒருவகையில் மத்திய அரசு அழுத்தம் கொடுத்து தமிழக மீனவர்கள் இழந்த படகுகளை மீட்கவும், இழப்பை ஈடுகட்டவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்கவில்லையெனில், தமிழ்நாடு மீனவர் காங்கிரஸ் சார்பாக சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் மீனவர்களை திரட்டி கடுமையான போராட்டத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்படும். - என அவர் அந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## கோவக்ஸின் தடுப்பூசியின் இறுதிக்கட்ட பரிசோதனை!

கொரோனா வைரஸுக்கு எதிராகப் பல்வேறு தடுப்பூசிகள் பரிசோதனை செய்யப்பட்டு வரும் நிலையில், இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள கோவாக்ஸின் தடுப்பூசியின் இறுதிக்கட்ட பரிசோதனை நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

ஐதராபாத்தில் உள்ள நிசாம்ஸ் மருத்துவக் கல்லூரியில், தன்னார்வலர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டு பரிசோதனை ஆரம்பமாகியது.

இரண்டு கட்ட மருத்துவ பரிசோதனைகளில், கோவாக்ஸின் தடுப்பூசி சிறப்பான பாதுகாப்பு மற்றும் நோய் எதிர்ப்புத் திறனை வெளிப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மூன்றாம் கட்ட பரிசோதனை நடவடிக்கைள் ஆரம்பமாகியுள்ளன. இந்தத் தடுப்பூசி 18 வயதுக்கு மேற்பட்ட 25 ஆயிரம் தன்னார்வலர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், அடுத்த வருடம் வரையில் அவர்கள் கண்காணிக்கப்படவுள்ளனர்.

## இந்தியா உட்பட நான்கு நாடுகளின் போர்ப்பயிற்சி மீண்டும் ஆரம்பமாகிறது



இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நான்கு நாடுகளின் கடற்படைகள் கூட்டாக மேற்கொள்ளும் போர்ப் பயிற்சி நாளை ஆரம்பமாகிறது.

இந்த ஆண்டில் இரண்டாவது கட்டமாக நடைபெறவுள்ள இந்தப் போர்ப் பயிற்சி கோவா கடல் பகுதியில் நடக்கவுள்ளது. சுமார் 13 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பயிற்சியில் ஆஸ்திரேலியாவும் இணைந்திருப்பது சீனாவை கோபமடையச் செய்துள்ளது.

ஜப்பானுக்கு எதிராக சென்காகு தீவுகள் விவகாரத்தில் உரிமை கொண்டாடும் சீனா, ஆஸ்திரேலியாவை வர்த்தகப் போரில் மிரட்டி வருகிறது.

அத்துடன், லடாக் எல்லையில் இந்தியாவுடனும் சீனா அத்துமீறலில் ஈடுபட்டுள்ள நிலையில் குறித்த நான்கு நாடுகளும் ஒன்றிணைந்த போர்ப் பயிற்சியை நடத்துகின்றன.

இதேவேளை, சீன கடற்படையை எதிர்கொள்ளத் தயாராக இருக்குமாறு இந்திய கடற்படைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2 ஜெய் இ முகமது பயங்கரவாதிகள் பதுங்கியிருந்தவேளை கைது!

*தலைநகர் டெல்லியில் பயங்கரவாத தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் பதுங்கியிருந்த 2 ஜெய் இ முகம்மது பயங்கரவாதிகளை கைது செய்ததன் மூலம், பயங்கர சதித் திட்டத்தை பொலிஸார் முறியடித்துள்ளனர்.*

*டெல்லியில் தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் பயங்கரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலின்பேரில், தனிப்படை பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். சராய் கலே கான் பகுதியில் உள்ள மில்லினியம் பார்க் அருகே நேற்றிரவு 10.15 மணியளவில் பொலிஸார் மறைந்திருந்தபோது அங்கு வந்த 2 பயங்கரவாதிகளைக் கைது செய்தனர்.*

*அவர்களிடம் இருந்து 2 ஓட்டோ, மெடிக் பிஸ்டல் துப்பாக்கிகள், தோட்டாக்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். அவர்கள் 2 பேரும், ஜம்மு - காஷ்மீரை சேர்ந்த 20 வயது நிரம்பிய அப்துல் லதீப், முகம்மது அஸ்ரப் ஆவர். 2 பேரிடமும் தீவிர விசாரணை நடத்தி வரும் பொலிஸார், மேலும் சில இடங்களில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.*

## மகாத்மாகாந்தியால் இந்தியா மீது ஈர்ப்பாம்!

### ஒபாமா தெரிவிக்கிறார்

குழந்தைப் பருவத்தில் இராமாயண, மகாபாரதக் கதைகளைக் கேட்டார் எனவும், மகாத்மா காந்தியால் தனக்கு இந்தியா மீது ஈர்ப்பு வந்ததாகவும் அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

'ஏ பிராமிஸ்டு லாண்ட்' என்னும் பெயரில் அவர் எழுதியுள்ள நூலில், இந்தோனேசியாவில் தான் வளர்ந்தபோது இராமாயண, மகாபாரதக் கதைகளைக் கேட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.



உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கையும், இரண்டாயிரம் இனக் குழுக்களையும், எழுநூற்றுக்கு மேற்பட்ட மொழிகளையும் இந்தியா கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தியால் தான் இந்தியா மீது தனக்கு ஈர்ப்பு வந்ததாகவும், பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக அஹிம்சைப் போராட்டத்தைக் கையாண்ட அவர் ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்களுக்குக் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச பயங்கரவாதத்தின் உலகளாவிய தன்மை குறித்து உலகம் படிப்படியாக அறிந்து வருகின்றது!

### அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தின் மீது கவனம் செலுத்த இந்தியாவின் அயராத முயற்சிகள் உதவின எனவும், சர்வதேச பயங்கரவாதத்தின் உலகளாவிய தன்மை தொடர்பாகவும் உலகம் படிப்படியாக அறிந்து வருகிறது எனவும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் காணொலி காட்சி வழியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் -

பயங்கரவாதத்துக்கான நிதி, ஆள் சேர்ப்பு போன்ற தொடர்புடைய அம்சங்களை வெளிக்கொண்டு வருவதற்கு நமது அயராத முயற்சிகள் உதவின. எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு ஓர் அரசு ஆதரவு அளிப்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக நமது அண்டை நாடு திகழ்கிறது.

இந்தியாவின் வந்தே பாரதம் திட்டத்தின் மூலம் கொரோனா முழு அடைப்பு காலகட்டத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து நமது நாட்டைச் சேர்ந்த 24 லட்சம் பேர் தாய் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டவரை அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்பவும் இந்தியா உதவியுள்ளது.

இதன் நோக்கம் எளிமையானது. இன்றைய இந்தியா எந்த ஓர் இந்தியரையும் வெளிநாட்டில் தவிக்கவிடாது. கொரோனா தொற்றுநோய் அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்ட பல பாடங்கள், வரும் நாள்களில் பிரதிபலிக்கும்.

பொருளாதார மீட்சிதான் நாட்டின் உடனடி கவனமாக இருந்தது. செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபருக்கான பொருளாதாரக் குறியீடுகள் உண்மையிலேயே ஊக்கமளிப்பனவாக உள்ளன.

கொரோனாவுக்கு பின்னரான மருத்துவ உபகரணங்களைப் பொறுத்தவரை நாட்டில் தற்போது 15 லட்சம் தனிமைப்படுத்தப்பட்ட படுக்கை வசதிகள் உள்ளன. 7 ஆயிரத்துக்கும் அதிகமான பரிசோதனை மையங்கள் உள்ளன. நெருக்கடியான தருணத்துக்கு இந்தத் திறனை எடுத்துச் செல்வதும் வழக்கமான நடைமுறையாக இதை மாற்றுவதுமே இப்போது உள்ள சவால் ஆகும்.- எனத் தெரிவித்துள்ளாரர்.



# எதியோப்பியாவில் பஸ் மீது கொடூரத் தாக்கு 34 பேர் பலி!

எதியோப்பியாவில் பஸ் மீது மர்ம நபர்கள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 34 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான எதியோப்பியாவில் உள்நாட்டுப்போர் நடந்து வரும் அதேவேளை, சில பயங்கரவாதக் குழுக்களும் அங்கு ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இதன் காரணமாக அந்த நாட்டு மக்கள் சூடான், தெற்கு சூடான் உள்ளிட்ட நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து வருகின்றனர். இதனிடையே கடந்த சில ஆண்டுகளாக அங்கு இன ரீதியிலான மோதல்கள் வலுத்து வருகின்றன.

இந்த நிலையில் அந்த நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள பெனிஜுங்குல் – குமுஸ் பிராந்தியத்தில் பயணிகள் பஸ் ஒன்றின் மீது மர்ம நபர்கள் சிலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 34 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அதனை தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்திய மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றமையால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தாக்குதல் நடந்த பகுதியில் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு தப்பியோடிய மர்ம நபர்களைப் பிடிப்பதற்கான தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் தேசிய மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

## கொரோனாத் தடுப்பூசி 95 வீதம் பயன் மற்றோர் அமெரிக்க நிறுவனம் அறிவிப்பு!

கொரோனா வைரஸுக்கான புதிய தடுப்பூசி கிட்டத்தட்ட 95 வீதம் பயனுள்ளதாக இருப்பதாக அமெரிக்க நிறுவனமான மொடேர்னா



நிறுவனத்தின் ஆரம்பத்தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அமெரிக்காவின் பைஸர் நிறுவனமும் தடுப்பூசி 90 வீதம் பயனளிப்பதாகத் தெரிவித்துள்ள நிலையில் விரைவில் மக்கள் பாவனைக்குத் தடுப்பூசி வெளிவரும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இரு நிறுவனங்களும் தமது தடுப்பூசிகளை வடிவமைக்க மிகவும் புதுமையான சோதனை அணுகுமுறைகளைப் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதுவொரு சிறந்த நாள் என மொடேர்னா மருந்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அடுத்த சில வாரங்களில் தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதலுக்கு விண்ணப்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.





# கொலம்பியாவில் வெள்ளப் பெருக்கு மூவர் பலி: 16 பேரைக் காணோம்!

கொலம்பியாவில் பெய்துவரும் கனமழையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கில் சிக்கி, இதுவரை மூன்று பேர் உயிரிழந்தமையோடு, 16 பேரை காணவில்லை என பேரிடர் இடர் மேலாண்மைக்கான தேசிய பிரிவு (யு.என்.ஜி.ஆர்.டி) தெரிவித்துள்ளது.

அந்தியோக்கியா மாகாணத்தில் உள்ள டபீபா மற்றும் உரமிட்டா நகராட்சிகளை இணைக்கும் பாதைக்கு கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடற்கரை நகரான கார்ட்ஜெனாவில் குடியிருப்பு பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் நூற்றுக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நிலச்சரிவுகள், வீடுகள் மற்றும் வாகனங்களை புதைத்து, பாதையின் ஒரு பகுதியை அழித்துள்ளது. அத்துடன் மின்சாரம், தொலைத்தொடர்புகள் முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கொலம்பிய ஜனாதிபதி இவான் டியூக் கூறுகையில், "குளிர்கால காலநிலையால் பாதிக்கப்பட்ட பல தளங்களை நாங்கள் பார்வையிடப் போகிறோம், விரைவில் நாங்கள் அனுப்ப வேண்டிய உதவிகளைத் திரட்டுகிறோம்."– என்று அவசர மண்டலங்களுக்குச் செல்வதற்கு முன்பு டியூக் கூறினார்.

# ஈரான் அணு ஆயுத மையங்களின் மீது ட்ரம்ப் தாக்குதல் நடத்த விரும்பினாரா?

## நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் தகவல்



ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பு மையங்களைக் குறிவைத்து இராணுவத் தாக்குதல் நடத்த அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ட்ரம்ப், விருப்பம் தெரிவித்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் ட்ரம்ப் தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்புத்துறையின் முக்கிய அதிகாரிகள் அவசர கூட்டத்திலேயே ட்ரம்ப் இது தொடர்பில் கலந்துரையாடினார் என நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், வெளியுறவுத்துறை செயலாளர் மைக் பொம்பியோ, பாதுகாப்புத்துறை செயலாளர், முப்படைகளின் தலைமை தளபதி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஈரான் அணு ஆயுத மையங்கள் மீது இராணுவ ரீதியில் தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்புகள் ஏதேனும் உள்ளனவா? என்று பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடம் ட்ரம்ப் கேட்டறிந்துள்ளார்.

ட்ரம்பின் விருப்பத்தைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரிகள், ஈரான் அணு ஆயுத மையங்கள் மீதான தாக்குதல் மிகப்பெரிய போருக்கு வழிவகுக்கும் என எச்சரிக்கை விடுத்தனர். அதிகாரிகளின் எச்சரிக்கை மற்றும் ஆலோசனையை அடுத்து தனது முடிவில் இருந்து ட்ரம்ப் பின்வாங்கினார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஈரானுக்கும், அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, சீனா, ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகளுக்கும் இடையில் கையெழுத்தான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகியதிலிருந்து அதிகமாக அளவில் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் கையிருப்பில் வைத்திருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றது.

இதனிடையே, ஈரான் குறைந்த அளவில் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அணுசக்தி ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டதைப் போல் 12 மடங்கு கையிருப்பு வைத்துள்ளதாக ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு (ஐ.ஏ.இ.ஏ) தெரிவித்துள்ளது.

அணுசக்தி ஒப்பந்தத்தின் கீழ், குறைந்த அளவில் செறிவூட்டப்பட்ட 202.8 கிலோ யுரேனியத்தை மட்டுமே ஈரான் கையிருப்பில் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அத்தகைய யுரேனியக் கையிருப்பை ஈரான் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த 2 ஆம் திகதி நிலைவரப்படி ஈரானிடம் 2 ஆயிரத்து 442.9 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பு உள்ளது. இது, கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி இருந்ததைவிட அதிகமாகும். அப்போது ஈரானிடம் 2 ஆயிரத்து 105.4 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பு இருந்தது.

இதுமட்டுமில்லாமல், அணுசக்தி ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட வீத்தைவிட அதிகமாக ஈரான் யுரேனியத்தை செறிவூட்டி வருகிறது.

## கரீபியன் நாடுகளை அச்சுறுத்தும் அயோட்டா புயல் 80 ஆயிரம் பேர் புயல் பாதிப்புக்கு உள்ளாகலாம்!



அயோட்டா புயல் நெருங்கி வருவதைத் தொடர்ந்து கரீபியன் நாடுகளில் ஒன்றான நிகரகுவாவில் 80 ஆயிரம் மக்களை இடமாற்றம் செய்யும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

5 ஆவது வகைப் புயலாக உருமாறியுள்ள அயோட்டா புயல், கொலம்பிய தீவுகளான சான் ஆண்ட்ரஸ் மற்றும் ப்ராவிடென்சியா ஆகியவற்றைக் கடந்துள்ளது.

தற்போது நிகராகுவாவின் கிழக்கு - தென்கிழக்கில் சுமார் 160 கிலோமீற்றர் தொலைவில் இந்த சூறாவளி நிலை கொண்டுள்ளது.

இந்நிலையில், நிகரகுவாவில் சுமார் 80 ஆயிரம் பேர் அயோட்டா புயலால் பாதிக்கப்படுவார்கள் என்று உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளதால், அவர்களை வெளியேற்றும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

## பொதுவெளியில் முகக்கவசம் அணிவது நியூஸிலாந்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது



நியூஸிலாந்தில் கொவிட்–19 தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் பொதுவெளியில் முகக்கவசம் அணிவதை அரசாங்கம் கட்டாயப்படுத்தியுள்ளது.

அத்துடன் ஒக்லாந்தில் பொது வாகனத்தில் பயணிப்பவர்கள் முகக்கவசம் அணிய வேண்டும் எனவும் புதிய சட்ட விதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடு முழுவதும் விமானம் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்தில் பயணிப்பவர்கள் முகக்கவசம் அணிய வேண்டும். மக்கள் பொது வெளியில் சமூக இடைவெளியைப் பொறுப்புடன் பின்பற்ற வேண்டும் என்று நியூஸிலாந்து பிரதமர் ஜெசிந்தா வலியுறுத்தியுள்ளார்.

காலைக்கதிர்



# உயிர்த்தஞாயிறு தாக்குதலில் கைதானவர் வீட்டுக்கு ரிஷாத், ஹலீம் சென்றுவந்தனர்!

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம்

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட மொஹினுதீன் இஹ்சான் எனும் சந்தேக நபரின் வீட்டுக்கு முன்னாள் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன் மற்றும் மொஹம்மட் ஹலீம் ஆகியோர் பல சந்தர்ப்பங்களில் சென்று வந்துள்ளனர் என ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

குறித்த சந்தேக நபரின் வீடமைந்துள்ள கிராம சேவகர் பிரிவின், கிராம சேவகர் நிலந்த சஞ்ஜீவ பொன்சேகா நேற்று ஆணைக் குழுவில் சாட்சியம் அளித்தபோது இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

நேற்றைய தினம் சாட்சி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், கிராம சேவகர் நிலந்த சஞ்ஜீவ பொன்சேகாவிடம், உங்கள் பிரிவில் மொஹம்மட் ஹனீபா முஹினுத்தீன் எனும்பெயர் கொண்ட ஒருவர் வசிக்கின்றாரா என அரச சிரேஷ்ட சட்டவாதி கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அவர், தெஹிவளை, கல்வல வீதி பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் முஹினுத்தீன் என்பவர் வசித்தார் எனக் கூறினார். முஹினுதீனுடன் அவரது மனைவி அஹமட் லசீம் காரியப்பர் பாத்திமா, மகன் மொஹம்மட் மொஹினுதீன் இஹ்சான் அஹமட், மகள் அஹமட் துஷ்ரா இஸ்லாம் ஆகியோரும் அந்த வீட்டில் வசித்தனர் என கிராம சேவகர் சாட்சியமளித்தார்.

எவ்வாறாயினும், தாக்குதல்கள் இடம்பெற்ற 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி ஆகும் போது, அவர்கள் அந்த வீட்டில் வசிக்கவில்லை எனவும் அதிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் உள்ள, பிறிதொரு வீட்டிலேயே அப்போது அவர்கள் வசித்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்களது வீடு திருத்தப்பட்டுக்கொண்டிருந்தமையால் இவ்வாறு அவர்கள் வாடகை வீட்டில் அப்போது வசித்தனர் என சாட்சியமளித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து சாட்சியமளித்த அவர், அந்த வாடகை வீட்டில் வசிக்கும் போது, இஹ்ஸான் அஹமட் எனும் இளைஞன் அடிக்கடி இளைஞர்களுடன் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்துகின்றமை தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றன. அவர் தனியார் கல்வி நிறுவனத்தில் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதே வேளை, தனியார் நிறுவனம் ஒன்றில் சேவையாற்றிக்கொண்டிருந்தார் எனக் குறிப்பிட்டார்.

இதன்போது, அவரின் வீட்டுக்கு வந்து சென்றவர்கள் தொடர்பில் ஏதும் தகவல்கள் கிடைத்தனவா என ஆணைக் குழுவின் உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த அந்தக் கிராம சேவகர், ரிஷாத் பதியுதீன், ஹலீம் ஆகிய முன்னாள் அமைச்சர்கள் உட்பட பல பிரபுக்கள் வந்து சென்றுள்ளனர் எனக் கூறினார்.

அத்துடன் இஹ்ஸான் அஹமட், பிரதேசத்தில் உள்ள தௌஹீத் ஜமா அத் பள்ளிவாசலுக்கு தொழுகைகளுக்காக சென்றுள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் குறிப்பிட்டார்.

அந்தப் பகுதியில் இரு பள்ளிவாசல்கள் இருக்கின்றன எனச் சுட்டிக்காட்டிய கிராம சேவகர், அதில் ஒன்று தௌஹீத் ஜமா அத் பள்ளிவாசல் எனவும் அதனால் அந்தப் பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைதியற்ற நிலைமைகள் தோன்றின எனவும் சாட்சியமளித்தார்.

இதனையடுத்து, அந்தப் குதியில் இஹ்ஸான் அஹமட்டுக்கு மேலதிகமாக வேறு எவரேனும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டனரா என அரசின் சிரேஷ்ட சட்டவாதி கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த கிராமசேவகர், அந்த பகுதியில் வசித்த மொஹம்மட் அக்ரம் அவ்கம், மொஹம்மட் அக்ரம் சாஜிபா ஆகிய சகோதரர்களும், புஹாரி மொஹம்மட் ரபீக் எனும் நபரும் கைது செய்யப்பட்டனர் எனக் கூறினார். இதனைவிட, இஹ்ஸான் அஹமட் வாடகைக்கு வசித்த வீட்டின் உரிமையாளரான தம்மிக பிரியந்த சமரசிங்கவும் நேற்று ஆணைக் குழுவில் சாட்சியமளித்தார்.

# கொரோனாத் தொற்றாளர் தொடர்பில் கொழும்பு மேயர் ரோஷிக்கு சந்தேகம்!



கொழும்பு மாநகர எல்லை பிரதேசத்தில் இதுவரை கண்டுபிக்கப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கையைப் பார்க்கும்போது 30 ஆயிரம் பேர் வரையான தொற்றாளர்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது என கொழும்பு மாநகர மேயர் ரோஷி சேனாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர எல்லை பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்ந்து இனம் காணப்பட்டு வருகின்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு மாநகர அதிகார பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமைவரை கொரோனா தொற்றாளர்கள் 4 ஆயிரத்தி 100 பேர் வரை இனம் காணப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாத்திரம் மாநகர எல்லையில் 97 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் இதுவரை 25 இற்கு அதிக மரணங்கள் பதிவாகி இருக்கின்றன.

தற்போதைய நிலைமையின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லை பிரதேசத்தில் 30 ஆயிரத்துக்கும் அதிக கொரோனா தொற்றாளர்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.

இருந்தபோதும் மாநகர சபை அதிகார பிரதேசத்தில் தொற்றாளர்களைக் கண்டு பிடிப்பதற்காக மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் நாளாந்தம் எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். – என்றார்.

# மலையகப் புத்திஜீவிகளின் முன்மொழிவுகள் புதிய அரசமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்



புதிய அரசமைப்பு தொடர்பாக மலையக புத்திஜீவிகளின் முன்மொழிவுகள் தொடர்பான கலந்துரையாடல் ஹற்றன் சமூக நல நிறுவனத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், சமூக சேவகர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் என பல தரப்பட்ட புத்திஜீவிகள் கலந்து கொண்டார்கள். இந்த கலந்துரையாடல் தொடர்பில் கருத்து தெரிவித்த பேராதனை பல்கலைகழக பேராசியர் எஸ்.விஜயசந்திரன் - அமைப்புகள் தனியாகவும், கூட்டாகவும் அறிக்கைகள் சமர்ப்பிப்பது எனவும், அறிக்கைகளிலே பொதுவாக மலையக மக்களுக்கான அரசியல் அலகுகளை உருவாக்குவது, மொழி தொடர்பான பிரச்சினைகள், மலையக மக்கள் வாழ்கின்ற குடியிருப்புகளை பொது நிர்வாக கட்டமைப்புக்கு கீழ் கொண்டு வருவது, காணி பிரச்சினைகளில் அக்கறை செலுத்தி அதற்கு ஏற்ற பிரேரணைகளை வடிவமைத்து தனியாகவும், கூட்டாகவும் அமைப்புகள் ஊடாக நிபுணத்துவ குழுவிடம் முன்மொழிவுகளை கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான திட்ட வரைவுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. - என அவர் தெரிவித்தார்.

# மேல் மாகாணத்தில் 95 நபர்கள் ட்ரோன் கண்காணிப்பால் கைது!

கொட்டாஞ்சேனை, வாழைத்தோட்டம், ஜா – எல மற்றும் வத்தளை பகுதிகளில் தனிமைப்படுத்தல் நடவடிக்கையை மீறிய 95 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ட்ரோன் கண்காணிப்பு மூலமான நடவடிக்கையின் போதே இந்த சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு மாவட்டத்தில் தற்போது அடையாளம் காணப்படும் கொரோனா தொற்று நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க தற்போது மேல் மாகாணத்தில் 24 பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாத்தளையில் உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் 60 கோடி ரூபா செலவில் 6 தேசியப் பாடசாலைகள்!

மாத்தளை மாவட்டத்தில் உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை ஜனவரி மாத ஆரம்பத்தில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, 60 கோடி ரூபா செலவில் 6 தேசிய பாடசாலைகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசாங்க தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய கொவிட் தொற்றுக்கு மத்தியில் நாடு மேலும் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்படுவதைத் தடுத்து, நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வதற்கு நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்படும் கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தின் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு குழுவால், மாத்தளை மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் பங்கேற்புடன் மாத்தளை மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று (திங்கட்கிழமை) அந்த மாவட்ட சுற்றுலா மேம்பாட்டு வளாக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போதே உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகமொன்றை அமைப்பது தொடர்பாகவும், 6 தேசிய பாடசாலைகளை மாத்தளைக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று இந்தக் கூட்டத்தில், மாத்தளை மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்ய 113 பட்டதாரி பயிற்சியாளர்கள் மற்றும் உயர் டிப்ளோமா கல்வியை நிறைவுசெய்த ஆசிரியர்களை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2021 முதல் காலாண்டில் ஆசிரியர் பற்றாக்குறைக்கு முழுமையான தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் ஆசிரியர் நியமனங்களின் போது பாடசாலைகளை அண்மித்து வசிக்கும் ஆசிரியர்களை அண்மித்த பாடசாலைகளுக்கு நியமிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தில் உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் ஆசிரியர் உதவியாளர்களை நிரந்தரமாக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும் இந்த மேம்பாட்டுக் குழுவில் முன்மொழியப்பட்டது.

அனைத்து அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் இணைந்து நிறுவிய புதிய பொறிமுறை ஊடாக நேரடியாக கிராமங்களுக்கு வளங்கள் பகிரப்படும் வேலைத்திட்டமொன்றை தயாரித்தல், எதிர்காலத்தில் மாவட்டத்துக்கென ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்வைத்தல் போன்ற அடுத்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியை கிராமத்தின் அபிவிருத்தியில் நேரடியாக ஈடுபடுத்துவதற்கு மாவட்ட மட்டத்தில் யோசனைகளை பெற்றுக்கொள்வதும் இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2020 இல் வெளியிடப்பெற்றது.